# மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## 250 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குக் கூடிய வெளிநாட்டு நிதி உதவிகளின் கீழ் செயற்படும் கருத்திட்டங்களை ஒன்றிணைத்தல், கண்காணித்தல், செயற்படுத்தல் மற்றும் நிர்வாகத்திற்கான அலகின் பணிக்குழு வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் வெளிநாட்டு உதவியின் கீழ் இலங்கை உள்ளூராட்சி நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அவற்றின் சேவைகளின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக பல கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் வீதி கருத்திட்டங்கள், கழிவுநீர் முகாமைத்துவ கருத்திட்டம், குடிநீர் கருத்திட்டம், கட்டிடங்கள்/பாலங்கள் கருத்திட்டம் மற்றும் கல்வி வசதிகள் கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்கள் சிறந்த முறையில் ஒன்றிணைத்தல், மற்றும் நிருவாகம் செய்து அரசாங்கத்தின் முதலீட்டுத் திட்டத்தின் கீழ் கண்டறியப்படும் அபிவிருத்தி இலக்கை உரிய காலப்பகுதிக்குள் அடைந்து கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் திட்ட அலகில் கீழ்க்காணும் செயற்றிட்டங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. உள்ளக கணக்காய்வாளர் - பதவிகள் 02

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து விடயத் 3துறைக்கு உரித்துடையதாக பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று

    **அத்துடன்**

    பட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி தொடக்கம் ஆகக் குறைந்தது முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் 14 வருட கால அனுபவம் இருத்தல். இவற்றில் 07 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று

    **அத்துடன்**

    பட்டப்பின் படிப்பு பட்டமொன்று அல்லது விடயத்துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் முழு நேர அங்கத்துவம் பெற்றுக்கொண்ட பின்னர் ஆகக் குறைந்தது முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் 12 வருட கால அனுபவம்.

03. அரசாங்கத்தின் நாடளாவிய சேவைகளில் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் அல்லது உரித்துடைய துறையில் சமமான மட்டத்தில் பதவியொன்று வகித்தல்.

    **அத்துடன்**

    11 வருட கால முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவராக அனுபவம் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

**சம்பள படிநிலை:** 2016.03.24ஆம் திகதிய இலக்கம் 1/2016 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் PS3 சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

### 02. பெறுகை விசேடத்துனர் - பதவி 01

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து விடயத்துறைக்கு உரித்துடையதாக பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று

    **அத்துடன்**

    பட்டம் பூர்த்தி செய்யப்பட்ட திகதி தொடக்கம் ஆகக் குறைந்தது முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் 14 வருட கால அனுபவம் இருத்தல். இவற்றில் 07 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பட்டமொன்று

    **அத்துடன்**

    பட்டப்பின் படிப்பு பட்டமொன்று அல்லது விடயத்துறைக்கு உரித்துடையதாக அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் முழு நேர அங்கத்துவம் பெற்ற பின்னர் ஆகக் குறைந்தது முகாமைத்துவ மட்டத்தில் பதவியொன்றில் 12 வருட கால அனுபவம்.

03. அரசாங்கத்தின் நாடளாவிய சேவைகளில் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் அல்லது உரித்துடைய துறையில் சமமான மட்டத்தில் பதவியொன்று வகித்தல்.

    **அத்துடன்**

    முதலாம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவராக 11 வருட கால அனுபவம் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

**சம்பள படிநிலை:** 2016.03.24ஆம் திகதிய இலக்கம் 1/2016 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் PS3 சம்பள மட்டத்தின் பிரகாரமாகும். மேலே சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**பொது நிபந்தனைகள் :**

- **வயது :** வயது 65 வருடங்களுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும். (2017.07.21)
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு ஊழியரின் மாதாந்த சம்பளத்தின் 8% சதவீதமாகும் என்பதுடன், சேவை வழங்குனரின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தும் சதவீதம் 12% மும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்துதல் 3% மும் ஆகும்.
- **சேவை நிபந்தனைகள்:** இந்தப் பதவி ஆரம்பமாக ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்த அடிப்படையிலாகும் என்பதுடன், திருப்திகரமான செயலாற்றுக்காக மீள் கருத்திட்ட ஒன்றிணைப்பு அலகின் தேவைப்பாடுகளின் மீது சேவை நீடிப்புக்கான சந்தர்ப்பம் உண்டு.

இதற்காக ஆர்வம் காட்டும் ஆட்கள் அவர்களின் சுய தரவுத் தகவல்கள், உரித்துடைய கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, இல: 330, யூனியன் பிளேஸ், கொழும்பு-02 என்ற முகவரிக்கு 2017 ஜுலை 21ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**எச்.ரீ. கமல் பத்மசிரி**
**செயலாளர்,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**